# டி.பி.கே.எல். அதிகாரியை மிரட்டியதாக வலைப்பதிவாளர் குற்றஞ்சாட்டப்படவுள்ளார்





கோலாலம்பூர், மே 20-

கடந்த மார்ச் மாதம் நிகழ்ந்த ஒரு பலூன் வியாபாரி சம்பந்தப்பட்ட ஒரு சண்டையை தொடர்ந்து ஒரு மாநகர அமலாக்க அதிகாரியை நோக்கி அச்சுறுத்தல் கருத்துக்களை வெளியிட்டதாக கூறப்படுவது தொடர்பில் ஒரு முகநூல் பயனர் இன்று நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்படவுள்ளார்.

குற்றவியல் மிரட்டல் விடுத்ததாக சந்தேகப் பேர்வழி குற்றஞ்சாட்டப்படவுள்ளார் என்று மாநகர காவல்துறை தலைவர் ருஸ்டி இசா கூறினார்.

மார்ச் 28ஆம் தேதி உரிமம் இல்லாத வியாபாரிகளுக்கு எதிராக கோலாலம்பூர் மாநகர மன்றத்தால் (டி.பி.கே.எல்.) மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையின் போது ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மானில் பலூன் வியாபாரியுடன் கைகலப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து காவல்துறை மூன்று புகார்களை பெற்றது. அச்சுறுத்தல் கருத்துக்களுடன் முகநூலில் தமது புகைப்படம் உலா வருவதாக ஒரு டி.பி.கே.எல். அதிகாரி செய்த புகாரும் இவற்றில் அடங்கும்.